

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரமுகர்கள் முன்னிலையில்,
வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் இன்று (01.09.2016) வெளியிட்டார்.

செ.வெ.எண்: 586/2016 நாள்: 01.09.2016

## பத்திரிகை செய்தி

---

தமிழ்நாடு முழுவதும் தொடர் திருத்தம் 2016 முடிவடைந்த நிலையில், இன்று (01.09.2016) வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. ஏற்கனவே இறுதி வாக்காளர் பட்டியல் 15.09.2015 அன்று வெளியிடப்பட்டது. 29.04.2016 -ன் படி வாக்காளர் பட்டியல் விபரம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

| தொகுதி எண் மற்றும் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 229-கன்னியாகுமரி | 139238 | 139861 | 37 | 279136 |
| 230-நாகர்கோவில் | 130088 | 133346 | 15 | 263449 |
| 231-குளச்சல் | 132349 | 129130 | 15 | 261494 |
| 232-பத்மனாபபுரம் | 118683 | 116569 | 17 | 235269 |
| 233-விளவங்கோடு | 118876 | 123700 | 19 | 242595 |
| 234-கிள்ளியூர் | 125491 | 125153 | 18 | 250662 |
| **மொத்தம்** | **764725** | **767759** | **121** | **1532605** |

பின்னர் 29.04.2016 முதல் நடைபெற்ற தொடர் திருத்தம் 2016-ன்படி கீழ்க்கண்டவாறு வாக்காளர் பட்டியலில் சேர்த்தல் மற்றும் நீக்கம் பணி மேற்கொள்ளப்பட்டது.

| தொகுதி எண் மற்றும் பெயர் | சேர்த்தல் | | | | நீக்கல் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் |
| 229-கன்னியாகுமரி | 150 | 159 | 1 | 310 | 3004 | 3296 | 1 | 6301 |
| 230-நாகர்கோவில் | 320 | 364 | - | 684 | 1845 | 1700 | 0 | 3545 |
| 231-குளச்சல் | 114 | 134 | - | 248 | 2379 | 2382 | 1 | 4762 |
| 232-பத்மனாபபுரம் | 151 | 198 | - | 349 | 2196 | 2051 | 2 | 4249 |
| 233-விளவங்கோடு | 203 | 192 | - | 395 | 1977 | 2021 | 1 | 3999 |
| 234-கிள்ளியூர் | 147 | 112 | - | 259 | 2124 | 1984 | 0 | 4108 |
| **மொத்தம்** | **1085** | **1159** | **1** | **2245** | **13525** | **13434** | **5** | **26964** |

இதனடிப்படையில் இறுதி வாக்காளர் பட்டியலில் கீழ்க்கண்டவாறு வாக்காளர் பட்டியல் விபரம் வெளியிடப்படுகிறது.

| தொகுதி எண் மற்றும் பெயர் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 229-கன்னியாகுமரி | 136384 | **136724** | **37** | 273145 |
| 230-நாகர்கோவில் | 128563 | 132010 | 15 | 260588 |
| 231-குளச்சல் | 130084 | 126882 | 14 | 256980 |
| 232-பத்மனாபபுரம் | 116638 | 114716 | 15 | 231369 |
| 233-விளவங்கோடு | 117102 | 121871 | 18 | 238991 |
| 234-கிள்ளியூர் | 123514 | 123281 | 18 | 246813 |
| **மொத்தம்** | **752285** | **755484** | **117** | **1507886** |

சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தில் பெயர் சேர்க்க வேண்டி விண்ணப்பித்திருந்த 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் வாக்காளர் அடையாள அட்டை சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மூலமாக வழங்கப்படும். 01.01.2017 அன்று 18 வயது பூர்த்தி செய்யும் நபர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட, வட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட மையங்களில் தேவையான விண்ணப்ப படிவங்களை பெற்று விண்ணப்பிக்கலாம். மேற்படி வரைவு வாக்காளர் பட்டியல் கோட்டாட்சியர், நகராட்சி ஆணையர், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து வரையறுக்கப்பட்ட மையங்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பெயர்கள் சேர்த்தல், நீக்குதல் தொடர்பான மனுக்கள் பெற 11.09.2016 மற்றும் 25.09.2016 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொ) திரு. பொ. இராஜேந்திரன், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், வட்டாட்சியர்கள் எ.வி.மூர்த்தி, திருமதி. புவனேஸ்வரி, திருமதி. முத்துலெட்சுமி, திருமதி. ஷீலா, தேர்தல் வட்டாட்சியர் திரு. சுப்பிரமணியன், நாகர்கோவில் நகராட்சி பொறியாளர் திரு. சுரேஷ், பத்மநாபபுரம் நகராட்சி ஆணையாளர் திரு. எஸ். முருகேசன், திரு. நாஞ்சில் சந்திரன் (அஇஅதிமுக), திரு. லீன்ஸ் ராஜ் (திமுக), திரு. பி. செல்வம் (தேசிய வாத காங்கிரஸ்), திரு. ஆர்.இராதாகிருஷ்ணன் (காங்கிரஸ்), திரு. என்.எஸ்.கண்ணன் (சிபிஐஎம்), திரு. எல். மகேஷ்லாசர் (காங்கிரஸ்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.